ADMINISTRATIVE SECRETARY TO THE RAJAH
RAMNAD
12 JUN 1959 ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
RAMANATHAPURAM

திருவாதி மாலை.

திருவல்லிக்கேணித்

தமிழ்ச்சங்க வெளியீடு, 61.

இது

ஸர்வமங்கள விஜயவாண்டு மீனத் திங்கள் இருபத்தொன்பதாம்
நன்னாள் ஸ்ரீராமநவமி யன்று அம்பத்தூர் டாக்டர்
G. வெங்கடேசய்யர் திருமாளிகையில்
வழங்கிய சந்தமிகு செந்தமிழ் மாலை.

*

சங்கக் காரியாலயம்:

ஆனந்த பிருந்தாவனம்,

ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,

அம்பத்தூர்.

11—4—1954.

ஸ்ரீ :

உள்ளுறை.

பக்கம்.

முகவுரை. ... 1

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

ஆதிபகவன். ... 4

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

Jyothi Printers, Madras-1.

ஸ்ரீ:

முகவுரை.

பூவிற்குத் தாமரையே ; பொன்னுக்குச் சாம்புநதம் ;
ஆவிற்(கு) அருமுனிஆ ; யானைக்(கு) - அமரர் உம்பல் ;
தேவிற் றிருமால் எனச்சிறந்த(து) என்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

—(திருவள்ளுவமாலை)

தமிழ்க்குக் கதியாவார் இருவர். கதி என்பதில் கஃகான் **கம்ப நாட்டாழ்வாரையும்** திஃகான் **திருவள்ளுவநாயனரையும்** குறிக்கும் என்ப.

திருவள்ளுவர் நற்றமிழர். இவர் செந்தமிழில் இயற்றிய தன்னேரிலாத நூல் **திருக்குறள்.** தமிழ் அணங்கு உச்சியிற் றரிக்கும் சூடாமணி எனச சொல்லக்கூடியதும, தமிழின் பெருமையை எங்கும் பரவச் செய்ததும், சாதி மத பேத மின்றி எக்காலத்தும் யாருங் கைக்கொள்ளக்கூடியதும், தமிழர்க்கு அரும் பெருஞ் செல்வமாயதும் இத்திருக்குறளே. திருவள்ளுவரை **ஸ்ரீவல்லபாசாரியர்** எனக்குறித்துள்ளார ஒரு பேரறிஞர். வள்ளுவர் என்பது கருமாத்யக்ஷர் என்னும் வடமொழிப் பொருளுடைய **வல்லபர்** என்னும் வடமொழியின் சிதைவாகும். வள்ளுவரை ‘ நல்லறந் தானென்றெள்ளை நவின்றுவற் புறுத்தலான, இல்லற மென்னும பொன்னுக் கியலுரை யாணி” (30) என்றும்; இவர் நூலின் ஏற்றத்தைச் சமயவேறு பாடின்றி, “ நால்வர் சொற் சைவர் வேதம் நளிர் குரு கூரன் சொல்லெப், போல்வலார் சிலர்தாஞ் சொல்லும் பொருவில்பா கவதர் வேதம், வால்வளை யலவும வீதி மயிலை வள் ளுவன் சொல் யார்க்கும், மேல்வழி யுணர்த்திக் கீழ்மை விளக்குநல் வேதமாமே,” (27) என்றும், இவர் நூலில் உரைத்த தருமங்களிற் கொலை மறுததலே முக்கியமான தருமம் என்பதைக் குறித்து “இந்திரர் பலரைச் செய்யு மிவுளியா கமும பொல்லாதென், றுந்திய கருணை வாய்ந் தோர்க் குதவியா தென்வா ராயிற், சந்திர வதனத் தாதி' தருமகா ரெழுவர் தம்மிற், பிந்திவள் ளுவப்பேர், தாங்கும் பெரியவன் பேசு நூலே.” (28) என்றும்; “சிறந்த மேலவர் தீவினை யொருவரைச் செய்யும்படி யுரைத்தாலு, மறந்

தழைத்ததோர் ஞாயமங் கதனிலுண் டாவதற் கிதுசான்றும்,
பறந்த வோதிமப் புன்னிறை யாதியர் பகர்ந்த சொற் குறித்
தேனும், இறந்த ஊனுமுண் பதுதகா தென்பதே இயற்றமிழ்
மறைக்கோளே" (49) என்றும் புலவர் புராணம் திருவள்ளு
வர் சருக்கம் அறுதி யிட்டு உரைக்கின்றது.

"ஆதலால், முற்கால வழக்கப்படி ஒழுக்கத்தை ஆதாரமாகக் கொண்டு பார்ப்பினும், இடைக்கால வழக்கப் படி சுற்றத்தார் மரபை ஆதாரமாகக் கொண்டு பார்ப்பினும், இக்கால வழக்கப்படி பெற்றோர் மரபை ஆதாரமாகக் கொண்டு பார்ப்பினும் வள்ளுவர் அந்தணரேயாகின்றார். இவ்வுண்மையை யாவரும் என்றும் மறவாமல் போற்றி வருவாராக."

"இங்ஙனம் திருக்குறளில் காணப்படுகின்ற ஒவ்வொரு முக்கிய கருத்தும் மேற்கோளின்றி அமைவதல்லவென்று மூலத்திலுலும், அதற்கு உச்சி மேற் புலவர் கொள்ளும், 'அரிமேலழ குறும் பரிமேலழகர்' உரையிலுலும் ஏற்படு வதால், ஒரு விஷயம் விளக்கமாகிறது. அதாவது, நாயனார் கருத்தை நன்கறியவேண்டுவோர் அவரது செய்கையை மட்டும் ஒதி விட்டுப் பின்னர் தமது யுக்தியையும், பிடிவா தத்தையுமே அத்தாட்சியாகக் கொண்டு ஒரு தலையாக நின்று வழக்குரைத்தல் பொருளற்ற செயல் என்பதற்கு ஏதுவாவதோடுபயன்றருவதுமல்ல வென்பது. ஆதலால் அறிஞர்களே! தமிழில் மிகச் சிறப்பாகக் கொள்ளப்படும் திருக்குறள் மட்டுமே யன்றி, பழங்காவியங்களையும் நன்கு அறிய வேண்டுவோர் அந்தந்த நூலாசிரியர்க்கிருந்த தகுதி யில் ஏகதேசமாவது பெற்றுத்தான் பலன் அடைய வேண்டும். அவ்வாறு செய்யாத காரணமே எண்ணற்ற கட்சி பேதங்களுக்கும் விண்வாதங்களுக்கும் பதர்பபேச்சு களுக்கும் இடமேற்பட்டது. இத்தகைய கேடுகளுக்கு நுணுகிய புலமையும், நூலறிவும், பொருள்காணும் திறனும், வடமொழி கல்லாமையுமே ஒருவாறு காரணம் எனலாம். இருமொழிப் புலமை இல்லாதார் குறளுக்குப் பொருளுரைப் பதும் அதனைக்கேட்பதும் குருடர் யானை கண்ட காட்சி யொக்கும்."

"அடியளந்தான், தாமரைக் கண்ணன் என்ற சொற் களை அவர் (திருவள்ளுவர்) வழங்குதலால் அவர் வழிபட்ட கடவுள் திருமால் ஆகும்."

முதற்பாலில் முதற்குறளாகிய

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்பதில் விஷ்ணுவுக்குரிய பகவந்நாமத்தை உரைத்தமையாலும், இரண்டாவது பாலில்

மடியிலா மன்னவ னெய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு. (610)

எனநிலங்கடந்த நெடுமுடியண்ணலைக் குறித்தமையாலும், மூன்றுவது பாலில்

தாம்விழ்வார் மென்றூள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணு லுலகு. (1103)

எனப் பரமபதத்தைக் குறித்தமையாலும், வள்ளுவர் வைணவர் என்பது தேறறம். விரிக்கிற் பெருகும்.

திருவள்ளுவ நாயனரின் பெருமையும், திருக்குறளின் சிறப்பும் ஒப்புயர்வற்றன. திருக்குறளைத் தக்க ஆசானிடம் முறையாகக் கற்று அதற்குத்தகநிற்றலே அப்பேரறிவாளனைப் போற்றுவதாகும்.

கடவுள் வாழ்த்து அதிகார நுண் பொருளை விளக்கும் "ஆதிபகவன்" என்ற தோர் கட்டுரை "திருவாதி மாலை" எனற திருநாமத்தோடு இத்தமிழ்ச் சங்கத்தின 61-ஆவது வெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இம்மாலைக்குப் பொருள் உதவி புரிந்த புண்ணியர் அனைவரும் மாதாநுபங்கியின் அருள் பெற்று இன்புறுவாராக.

பொங்கும் மங்கலம்
எங்கும் தங்குக.

ஸ்ரீரங்கவிலாசம்,
அம்பத்தூர்,
11-4-1954.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ :

ஆதிபகவன்.

[பந்தல்குடி பாரத்வாஜ

மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார்,

தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம், அம்பத்தூர்.]

மூந்தை மறைநூன் முடியெனலாந் தண்குருகூர்ச்
செந்தமிழ் வேத சிரமெனலாம்—நந்தும்
புழைக்கைக்கும் நேயப் பொதுவர் மகளிர்க்கும்
அழைக்கைக்கு முன்செல் லடி.

—(நளவெண்பா.)

[முந்தை - ஆதியிலுண்டான; மறை - வேதத்தின்; முடி - கிரீடம்; செந்தமிழ் - செவ்வையான தமிழ்ப்பாஷையின் வடிவான; நந்தும் - துன்பப்பட்டுக் கொண்டிருந்த; புழைக்கை - யானை; பொதுவர் - இடையர்; மகளிர் - பெண்கள்; செல் அடி - சென்ற பாதம்.]

"ஆதிபகவன்" என்பது ஆதியாகிய பகவன் என விரியும். இது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. ஒரு பொருளை உணர்த்துதற்பொருட்டு நடுவே ஆகியவென்னும், பண்புருபு தொக்கு நிற்கப் பொதுப் பெயருஞ் சிறப்புப் பெயரும் தம்முட் புணர்ந்து வருவது இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாம். இதில் ஆதி யென்பது சிறப்புப் பெயரும் பகவன் என்பது பொதுப் பெயருமாம். இது வடமொழிப் புணர்ச்சி யாதலால், வலிமிக வில்லை. இது தமிழ் நூன் முடிபாயின் ஆதிப்பகவன் என்று வல்லொற்று மிகும். 'பகவன்' என்பது **பகவாந்** என்னும் வடமொழியின் விகாரம்.

பகவான் என்ற சப்தத்தின் பொருள் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் விளக்கப் பெற்றுள்ளது. அது பின்வரு மாறு :—

"சுத்தே மஹாவிபூத்யாக்யே பரே ப்ரஹ்மணி சப்த்யதே,
மைத்ரேய ! பகவச் சப்தஸ் ஸர்வகாரண காரணே.
ஸம்பர்த்தேதி ததா பர்த்தா பகாரோர்த்தத்வயாந்வித :,
நேதா கமயிதா ஸ்ரஷ்டா ககாரார்த்தஸ் தத : ஸ்ம்ருத :.
ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யச : ச்ரிய :,
ஜ்ஞாந வைராக்ய யோச்சைவ ஷண்ணும் பக இதீரணை.
வஸந்தி தத்ர பூதாநி பூதாத்மந் யகிலாத்மநி,
ஸ பூதேஷ்வகேஷ்வ வகாரார்த்தஸ் ததோவ்யய :,
ஜ்ஞாநசக்தி பலைச்வர்ய வீர்யதேஜாம் ஸ்யசேஷத :,
பகவச்சப்த வாச்யாநி விநா ஹேயைர் குணாதிபி :.
ஏவமேஷ மஹாசப்தோ மைத்ரேய பகவாநிதி,
பரமப்ரஹ்மபூதஸ்ய வாஸுதேவஸ்ய நாக்யக :.
தத்ர பூஜ்ய பதார்த்தோக்தி பரிபாஷாஸமந்வித :,
சப்தோயம் நோபசாரேண அந்யத்ர ஹ்யுபசாரத :."

[மைத்ரேயரே ! சுத்தமானதும், 'மஹாவிபூதி' என்னும் பெயரையுடையதும், காரண புருஷர்களுக்கெல்லாம் காரண மாயிருப்பது மான பரப்ரஹ்மத்தினிடத்தில் பகவச் சப்தம் சொல்லப் பெறுகிறது. '(ப்ரக்ருதியை) காரியதசை அடையச் செய்பவன்'. 'ஸ்வாமி', என்னும் இரண்டு பொருள்களுடன் கூடியது பகாரம். அப்படியே 'ரக்ஷிப் பவன், ஸம்ஹரிப்பவன், ஸ்ருஷ்டிப்பவன், என்பது 'க' என்னும் எழுத்தின் அர்த்தம் என்று சொல்லப் பெறு கிறது. ஸம்பூர்ணமான ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, செல்வம், ஜ்ஞாநம், வைராக்யம் என்னும் இந்த ஆறு குணங்களுக்கும் 'பக' என்னும் பதம வாசகமாயிருக்கிறது. பூதங்களே சரீரமாகக் கொண்டவனும், எல்லாவற்றுக்கும் ஆத்மாவாயிருப்பவனுமான அவனிடத்தில் பூதங்கள் வஸிக்கின்றன. அவனும் எல்லா பூதங்களிலும் வஸிக்கிறான். ஆகையால் அழிவற்றவனை பகவான் 'வ'காரத்துக்கு அர்த்தமாகிறான். கீழானவையான முக்குணங்கள் முதலிய வற்றுடன் சேராத 'ஜ்ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்' என்னும் எல்லா குணங்களும் 'பகவான்' என்னும் சப்தத்தினால் சொல்லப் பெறுகின்றன. மைத் ரேயரே ! இம்மாதிரியாக பகவான் என்ற இந்த மஹாசப்தம் பரப்ரஹ்மமான வாஸுதேவனுக்கே உரியது. வேறொரு

வரையும் குறிக்காது. பூஜிக்கத்தக்க பொருளைக் குறிப்பதாகிய இந்த சப்தம் அவன் விஷயத்தில் ஔசாரிகமாக (அழுக்கில்லாமாக)ச் சொல்லப்படுவதில்லை. மற்றவர்கள் விஷயத்தில் ஔபசாரிகமாகச் சொல்லப் பெறுகிறது.]

ஸ்ரீ விஷ்ணு புராணம் (மதுரை ஜில்லா, திருப்புத்தூர்த் தாலூகா சிறு கூடற்பட்டி என்னும் செந்நெற்குடி சாமிக் குட்டி ஐயர் என்று பெயர் வழங்கும் ப்ரஹ்ம ஸ்ரீ சே. சுப்பராய ஐயரவர்களால் தமிழில் இயற்றப்பெற்றது. 1904. குரோதி ஆண்டு ஐப்பசித் திங்கள்.) ஆருவதம்சம். ஐந்தாவது ஆத்தியந்தகப் பிரளயமும் சனைதி துக்கநிரூபணமும் உரைத்த அத்தியாயம். இதில் உள்ள சில பாக்கள் ஈண்டு தருதும்.

அகமதி னிசைக்க வேண்டு மப்பர மான்மா ரூபம்
பகவனென் றுரைக்கா நின்ற பதத்திற்குப் பொருளா மந்தப்
பகவரு நாம மன்னேன் பற்பல குணஞ்சொ ரூப
முகவைசால் விபவ மின்ன வுரைத்திடத் தக்க தன்றே. (42)

இவ்வகை யுரைக்கத் தக்க வெழிலமை யுருவம் வாய்ந்த
செவ்விய பரமான் மாவின் றத்துவந் தெரிப்ப தான
வவ்வயிற் றுவாத சாக்க ரத்திசை யங்க மாக்கொண்
டொவ்விய வித்தை தானே யுயர்பர வித்தை யாகும். (43)

மற்றுமிப் பகவ னென்னும் வாசக நாம ரூபம்
பெற்றில ஙகி யன்ன பிரமத்திற் கிணையாய் நின்ற
பற்றறு முத்த னுக்கும் பகரும்பூ சையினி மித்தாய்
நற்றவ வுபசர் ரத்தா னவின்றதஃ தென்ன வோர்தி. (44)

பிரமமாம் வாசு தேவற் கல்லது பிறருக் காகா
துரவுமிச் சொல்லை மேன்மை யுறுத்துதற் காமி டத்தில்
விரவுசங் கேத மாக விளம்புமக் குறிப்பி னனும் [(47)
பரவுமவ் வாசு தேவன் றன்னையே யுணர்த்தும் பண்பின்.

மற்றைய விடத்தோ வென்னி லுபசார வழக்காய்ச் செல்லு
மற்றது தனக்கும் ஞான விசேடமங் கிருக்க வேண்டு
முற்றவங் கவையா வென்னி லுற்பத்தி யிலயத் தோடு
சொற்றபூ தத்தின் போக்கு வரவொடு துகளில் வித்தை.(48)

அவித்தையென் றிவற்றை யோர்ந்தோன் பகவனென்
[றறைதல் வேண்டும்
புவித்தல மதனின் மற்றும் பூரண ஞானஞ் சத்தி
கவித்திடு செல்வந் தேசு கழுமுவீ ரியமே யாதி
யிவற்றினை யுடைமை யின குணங்களில் லாமை யின்ன.(49)

வாக்கியப் பொருளாய் நிற்கு மாதலா லிஃது பற்பல
போக்கமை குணங்க ளின்றிப் புனிதமாங் குணம்பூண்
[டியாவு
மாக்குமெம் பெருமா னுக்கே யாகின்ற தனேத்தி னுக்கு
மீக்கொளா தார மாகி விளம்புமா தேய மாகி. (50)
விளங்குறுமவ் விண்டுவினே வாசுதே வப்பதந்தான் விளக்கும்.

எனவே, நிறைந்த மகிமை, தைரியம், கீர்த்தி, ஐசுவரியம், ஞானம், வைராக்கியம் என்கிற ஆறு குணங்களையும் உடைய கடவுள் என்பது 'பகவன்' என்பதற்குப் பொருள் என்க.

த்யாயீத புருஷம் விஷ்ணும் நிர்க்குணம் பஞ்சவிம்சகம்,
புரமாக்ரம்ய ஸகலம் சேதே யஸ்மாந் மஹாப்ரபு :.
தஸ்மாத் புருஷ இத்யேவ ப்ரோச்யதே தத்வசிந்தகை :.

—(ஸ்ரீவிஷ்ணுஸ்ம்ருதி)

[ஸத்வராஜஸ்தமோகுணங்கள் அற்றவனும், இருபத்தைந்தாவது தத்வமான ஆத்மாவுக்கு அந்தர்யாமியும், புருஷன் என்று சொல்லப் பெறுபவனுமான விஷ்ணுவை த்யானம் செய்யுங்கள். ஸர்வேச்வரனை இவன் எல்லாப் புரங்களையும், ஹ்ருதயகுஹைகளையும் வியாபித்து சயனித்துக்கொண்டிருக்கிறுனைகயால், தத்வம் அறிந்தவர்களால் புருஷன் எனப்படுகிறுன்.] என்றும்:

பூஸ்ஸ்ம்ஞேஸ்மிந் சரீரே வை சயநாத் புருஷோ ஹரி :,
சகாரஸ்ய ஷகாரோயம் வ்யத்யாஸேந ப்ரயுஜ்யதே.
யதி வா பூர்வமேவாஹமிஹேதி புருஷம் விது :,
யதி வா பஹுதாநாத் வை விஷ்ணு : புருஷ உச்யதே.
பூர்ணத்வாத் புருஷோ விஷ்ணு: புராணத்வாச்ச சார்ங்கிண:,
யத்வா புருஷசப்தோயம் ரூட்யா வக்தி ஜநார்தநம்.

—(பாத்மபுராணம்)

['புரம்' எனப்படும் இந்த சரீரத்தில் சயனித்துக் கொண்டிருப்பதால் ஹரி புருஷன் எனப்படுகிறுன். சகாரத்திற்குப் பதிலாக ஷகாரம் (புருஷ சப்தத்தில்) பிரயோகிக்கப் படுகிறது. 'நான்பூர்வத்திலிருந்து இங்கு இருக்கிறேன்' என்றதால் புருஷன் எனப்படுவதாகவும் கொள்ளலாம். அதிகமாக அளிப்பவனுகையால் ('புரு ஸநோதி இதி புருஷ:' என்னும் வ்யுத்பத்தியின்படி) விஷ்ணு புருஷன் எனப்படுவதாகவும் கொள்ளலாம். பூர்ணனை யிருக்கையாலும்,

புருஷன் ஆகிறான் விஷ்ணு. சார்ங்கமென்னும் வில்லாண்ட வனுக்குப புராணரு யிருக்கையாலும் புருஷன் என்னும் பெயர் வழங்குகிறது. இப்புருஷ சப்தம் ரூடியிலல் ஜநார்த னனைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம்.] எனறும்;

பூதைர் மஹத்பிர் ய இமா : புரோ விபு :
நிர்மாய சேதே யதமூஷு : பூருஷ :,
ஸ்வாம்சேந விஷ்ட : புருஷாபிதாநம்
அவாப நாராயண ஆதிதேவ :.
பூதைர் யதா பஞ்பி ராத்மஸ்ருஷ்டை :
புரம் விராஜம் விரசய்ய தஸ்மிந்,
ஸ்ருஷ்ட்வா ஸ்வசக்த்யேத மநுப்ரவிஷ்ட :
சதுர்விதம் பரமாத்மாம்சகேந.
அதோ விதுஸ் த்வாம் புருஷம்.....

—(பாகவதம்)

[பெரிதான பஞ்ச பூதங்களால் அண்டங்களாகிய இப் புரங்களை ஸ்ருஷ்டித்து, ஸர்வவ்யாபியான புருஷன, தன் னுடைய ஏகதேசத்தால் அவைகளை வியாபித்துக்கொண்டு சயனித்துக் கொண்டிருக்கிறான். (ஆகையால்) ஆதிதேவ னான நாராயணன் புருஷன் என்னும் பெயரை அடைந்தான். தன்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பஞ்ச பூதங்களால் ஒளியுள்ள இவ்வண்டத்தை நிர்மாணம் செய்து, அதில் தேவமநுஷ்ய திர்யக் ஸ்தாவர ரூபமான சதுர்வித சேதனர்களையும் ஸ்ருஷ்டித்து, தன்னுடைய சக்தியால் அவற்றை வியா பித்து விளங்குவதால் உன்னை புருஷன் என்று அறி கிறார்கள்.] என்றும்;

ய ஏவ வாஸுதேவோயம் புருஷ : ப்ரோச்யதே புதை:,
ப்ரக்ருதி ஸ்பர்சராஹித்யாத் ஸ்வாதந்தர்யாத் வைபவாதபி.
ஸ ஏவ வாஸுதேவோயம் ஸாக்ஷாத் புருஷ உச்யதே,
ஸ்த்ரீப்ராயமிதரத் ஸர்வம் ஜகத் ப்ரஹ்மப்ரஸ்ஸரம்.
ப்ரஹ்மாத்யா தேவதாஸ்ஸர்வா யக்ஷதும்புருமாநுஷா:,
தே ஸர்வே புருஷாம்சத்வாத் விச்ருதா: புருஷா இதி.

—(நாரஸிம்ஹபுராணம்)

[எவனொருவன் வாஸுதேவன எனப்படுகிறானோ அவனே புருஷன் என்றும ஞானிகளால் சொல்லப்படு கிறான. ப்ரக்ருதி ஸ்பர்சமற்றவனு யிருக்கையாலும், ஸ்வதந்த்ரனு யிருக்கையாலும், பெருமையை யுடையவனு யிருக்கையாலும் அந்த வாஸுதேவனே ஸாக்ஷாத் புருஷ

னைச் சொல்லப்படுகிறான். பிரமனே முன்னிட்ட எல்லா உலகும் ஸ்தீ ப்ராயர்களே. பிரமன் முதலிய எல்லா தேவதைகளும், யக்ஷர்கள், தும்புருக்கள், மநுஷ்யர்கள் ஆகிய எல்லாரும் புருஷனுடைய அம்சத்தைப் பெற்றிருக்கையால் புருஷன் என்று சொல்லப்படுகிறார்கள்.] என்றும்;

தஸ்யைகஸ்ய மஹத்த்வம் ஹி ஸ சைக: புருஷ: ஸ்ம்ருத:,
மஹாபுருஷசப்தம் ஹி பிபர்த்யேக: ஸநாதந:.
ஸ ஹி நாராயண ஜ்ஞேய: ஸர்வாத்மா புருஷோ ஹி ஸ:.

—(மஹாபாரதம்.)

[அவன் ஒருவனுக்கே பெருமையுண்டு; அவன் ஒருவனே புருஷன் எனப்படுகிறான்; ஸநாதனனான அவன் ஒருவனே மஹாபுருஷ சப்தத்தைத் தரிக்கிறான். அவனே நாராயணன் என்று அறியத்தக்கவன்; ஸர்வாந்தர் யாமியான புருஷனன்றோ அவன்.] என்றும்;

அந்ய நாம்நாம் கதிர் விஷ்ணுரேக ஏவப்ரகீர்த்தித:,
ருதே நாராயணாதீந் நாமாநி புருஷோத்தம:.
ப்ராதாந்யத்ரபகவாந்.....

[மற்ற தெய்வங்களின் நாமத்திற்கும் விஷ்ணு ஒருவனே கதியாகக் கீர்த்திக்கப்படுகிறான். நாராயணாதிகளான சில அஸாதாரணமான பெயர்களைத் தவிர்த்து மற்றப் பெயர்களை பகவான் புருஷோத்தமன மற்றவர்களுக்குக் கொடுத்தான்.] என்றும்;

ததேவ பகவத் வாச்யம் ஸ்வரூபம் பரமாத்மந:,
வாசகோ பகவச்சப்தஸ் தஸ்யாத்யஸ்யாக்ஷயாத்மந:.

—(விஷ்ணுபுராணம்)

[அந்த பரமாத்ம ஸ்வரூபமே பகவான் எனப்படுவது. அழிவற்றவனான அந்த ஆதிபுருஷனுக்கே வாசகமாயிருப்பது பகவச்சப்தம்.] என்றும்;

பகவாநிதி சப்தோயம் ததா புருஷ இத்யபி
நிரூபாதி ச வர்த்ததே வாஸுதேவே ஸநாதநே.

—(வராஹபுராணம்.)

[**பகவான்** என்னும் சப்தமும், புருஷன் என்னும் சப்தமும் இயற்கையாகவே பழமையானவனான வாஸுதேவனிடமே விளங்குகின்றன.] என்றும்;

"ப்ருஹத்வம் சஸ்வரூபேண குணை : சயத்ரஅநவதி காதிசயம்
ஸ : அஸ்யமுக்ய : அர்த்த : ஸ்ச ஸர்வேச்வரஏவ.
அதோப்ரம்ஹசப்த : தத்ரைவ முக்ய வ்ருத்த :.
தஸ்மாத் அந்யத்ரதத் குணலேச யோகாத் ஔபசாரிக ..
பகவச்சப்தவத்."

—(ஸ்ரீபாஷ்யம்.)

[ஸ்வரூபத்தினாலும், குணத்தினாலும் எல்லையற்ற மேன்மையுடைய பெரியதன்மை எவரிடம் இருக்கிறதோ அவரே பரப்ரஹ்ம சப்தத்திற்கு முக்யமான உரிமையுடையவர். அவர் ஸர்வேச்வரனே. ஆகையால் அவரையே ப்ரமம சப்தம முக்யமாய்க் கூறுகின்றது. பகவச் சப்தம் போல் ப்ரமம சப்தமும், மற்றவர்களிடத்தில் பெரிதா யிருக்கும் தன்மை லவலேசம் இருப்பதால், உபசாரமாக, உரைக்கப் பெறுகிறது. வாஸ்தவமாக அவர்கள் பகவானும் அல்ல; ப்ரமமமும் அல்ல. அப்படிச் சொல்லும் இடங்களில் மரியாதைக்காகவே சொல்லப் பெற்றிருப்பதாகக் கொள்ள வேணும்.]

என்றும் கூறுவதிலிருந்து பகவான், புருஷன் என்னும் இவ்விருபதங்களும் முக்யமாக நாராயணனையே குறிக்கும் எனபது தெளியலாம்.

"**பகவாந்**" என்பது ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் ஒன்று. அதற்குரிய பாஷ்யம பினவருமாறு :—

"563 **பகவான்** ஹரிவம்சத்தில் சொல்லியபடி 'பகம்' என்னபபடும பூரணமான ஐச்வர்யம், தர்மம, கீர்த்தி, லக்ஷ்மி, வைராக்யம், மோக்ஷம ஆகிய ஆறுகுணங்களும பொருந்தினவர், விஷ்ணு புராணத்தில் சொல்லியபடி, பிராணிகள் உண்டாவதையும், அழிவதையும், வளர்வதை யும், தேய்வதையும், ஞானத்தையும, அஞ்ஞானத்தையும அறிபவர். (**சங்கரபாஷ்யம்.**)

குற்றங்களனைத்தையும ஒழித்துக் கல்யாண குணங் களே நிரமபினஸ்வரூபமாதலின், மிகவும் பூஜிக்கத்தக்கவர், (**பட்டர்பாஷ்யம்.**)"

"அந்தமிலாதியம்பகவன்" என்பது **திருவாய்மொழி** (1-3-5). இதன் வியாக்கியானங்களை ஈண்டுத்தருவேன்.

"தனக்கு அந்தமின்றி எல்லார்க்கும் தான் ஆதியாய் ஸ்வாபாவிகமாய் ஹேயப்ரத்யநீகமான ஜ்ஞாநாதி கல்யாண குணபரி பூர்ணன்" (**ஒன்பதினாயிரப்படி.**)

"அந்தமில் - முடிவில்லாத, ஆதி - முதலாகையாலே நித்யனுய், அம் - ஹேயப்ரதிபடனுய், பகவன் – கல்யாண ரூபமான ஜ்ஞாந சக்த்யாதிகுண விசிஷ்டனை பகவானுடைய." (பன்னீராயிரப்படி.).

"அந்தமிலாதி - ஆப்ததமன். எல்லார்க்கும் உத்பத்தி விநாசங் களாலேயிறே ஜ்ஞாந ஸங்கோசம் பிறப்பது; இவனுக்கு அவையில்லாமையாலே அகர்ம வச்யனென்கிறது. அம்பகவன் - ஜ்ஞாநாதிகளால் அல்பம் உத்கர்ஷ உடையவன் பக்கலிலே பகவச்சப்தம் வர்த்தியாநின்றதிறே; "அந்யத்ர ஔபசாரத:" பகவச்சப்தம் முக்யமாக வசிப்பது இவன்பக்கலிலே, அல்லாதார் பக்கல் ஔபசாரிகம்." (ஈடு)

"அமலனதிபிரான்" என்பதில் உள்ள "ஆதி" எனபதற்கு "'ஏஷ கர்த்தா நக்ரியதே' இத்யாதிகளிற்படியே ஸர்வ ஜகதேக காரணபூதன். இத்தால் 'காரணமே சரண்யம்' என்கிறபடியே முமுக்ஷுவுக்கு சரணமாகப் பற்றப்படுமவன் என்று பலிதம்: இக்காரணத்வமும் மோக்ஷப்ரதத்வமும சத்ரசாமரங்கள் போலே ஸர்வலோக சரண்யனுக்கு விசேஷ சிஹ்நங்கள்" என்று வியாக்கியானம் இட்டுள்ளார் முதலாழ்வார் யோகத்தில் நம் நிகமாந்த மஹாதேசிகன்.

இதுகாறும் கூறியவற்றுல் "ஆதிபகவன்" ஸர்வ லோக சரண்யனை ஸ்ரீமந்நாராயணனை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

தெய்வப புலமைத் திருவள்ளுவநாயனார் பாயிரம் முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்து ஆதிச்செய்யுளாகிய

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

என்ற குறளில் இறைவனது உண்மையுரைக்கும்முகத்தான் அவனது தலைமையையும் விளக்கினர். இவ்வாறு தலைவனுயிருக்கின்ற இறைவன் திருவடியையே உபாயமாகப் பற்றி உயயவேண்டும் என்று பின் உரைக்கப் பெறுதற்குத் தோற்றுவாயாக அவ்விறைவன் குணபூர்த்தியுடையவன் என்பதை **பகவச்** சப்தத்தாற் கூறினர். அடைக்கலம் புகுகின்றவன் குணபூர்த்தியில்லாத வஸ்துவைப் பற்றுவானேல் அவன் காரிய ஸித்தி அடையான். சக்ரவர்த்தித் திருமகன் வருணனைச் சரண்புக்கதும், தசரதன் பரசுராமன் அடைக்கலம் புகுந்ததும பலியா தொழிந்தமை அறியலாம்.

பகவச் சப்தமானது ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐசுவர்யம், வீர்யம், தேஜஸ் என்ற ஆறுகுணங்களையும் குறிப்பிடும் என்பது முன்னரே விளக்கப பெற்றது. இவ்வறுகுணங்களை யுடையவன் பகவன் என்பது போதரும். இறைவனுக்கு எண்ணிறந்த குணங்கள் உள்ளன. அவற்றுள்ளும் முக்ய மாயிருப்பன இவ்வாறு குணங்களாதலால் இவற்றைச் சுட்டி உணர்த்தினர். மேலும அவனுடைய கணக்கற்ற குணங்களை இரண்டுவகையாகப் பிரித்து உணர்த்துவார் கள். அவையாவன:—பிறர்க்கு உபயோகப்படும் குணங்கள், தன்னியல்பை விளக்குங் குணங்கள் என்பன. இவற்றில் முன்னவற்றை ஸர்வேசுவரன் அநுகூலராகிய அடியவர்கள் விஷயத்தில் உபயோகப்படுத்துகிறான். பராக்ரமம் முதலிய பின்னர் விவரித்த குணங்களை அடியவர்கட்கு விரோதி களாகியசத்ருக்கள் விஷயத்தில் உபயோகப்படுத்துகிறான். இதனால் வாத்ஸல்யாதி குணங்கட்கும், பராக்ரம முதலிய குணங்கட்கும் முறையே அநுகூலரும், பிரதி கூலரும் விஷயமாவார்கள் என்பது விளங்கும். இந்தஜ்ஞானமுதலிய ஆறுகுணங்கட்கும் அநுகூலர் பிரதிகூலர் என்ற வேறு பாடில்லாமல் எல்லோரும் விஷயமாவார்களாதலால் இக்குணங்களை முற்கூறினர் என்றுங் கொள்ளலாம.

சரணம் புகுமவன் தனக்குள்ள விரோதியை அறிந்து போக்கி நற்பலனைத் தருதற்குரிய அறிவாற்றல் முதலிய குணங்கள் உடையவனையே அடைவான் என்பது ஒருதலை யன்றே! அம் முறை விளங்க முதற்குறளில் பகவச் சப்தத்தாற் கூறினர் என்பதும் பொருத்தம உடையதே.

இனி, ஜ்ஞாநமுதலிய அறுகுணங்களின் பொருள் உரைப்பாம்.

(1) **ஜ்ஞாநமாவது**—எப்பொழுதும் எல்லாவற்றையும் தெளிவாக விளக்கக் கூடியதாயும, தனக்குத்தானே பிரகாசமாயும் உள்ள குணவிசேஷம்.

(2) **சக்தியாவது**—ஜகத்காரணமா யிருக்கின்ற குண விசேஷமாதல், அகடிதகடனா சாமர்த்யமாதல் (சேராத வற்றைச் சேர்ப்பது)

(3) **பலமாவது**—எல்லா வஸ்துக்களையும் தாங்கும் ஸாமர்த்யம்.

(4) **ஐச்வர்யமாவது**—எல்லாவற்றிற்கும் கர்த்தாவா யிருத்தலின் லக்ஷணமான ஸ்வாதந்தர்யம் அல்லது எல்லா வஸ்துக்களையும் நியமிக்கும் ஸாமர்த்யம்.

(5) **வீர்யமாவது**—ஜகத்திற்கு உபாதான காரணமாயிருந்தும் ஸ்வரூப விகாரமில்லாதிருக்கும் அவிகாரதை. (விகாரமில்லாதிருத்தல்)

(6) **தேஜஸ்ஸாவது**—ஸஹாயத்தை அபேக்ஷியாதிருத்தல்.

ஸர்வேசுவரன் இந்த ஜ்ஞாநமுதலிய ஆறுகுணங்களையுடையவனாயிருந்தே அநுகூலரக்ஷணத்தையும், பிரதிகூலநிரசனத்தையும் (அழித்தலையும்) செய்யவேண்டியதாயிருப்பதால் இவ்வறுகுணங்கட்கு எல்லாரும் விஷயம் என்று சொல்லப்பெற்றது.

"இப்படி ஸ்வாதீந ஸர்வ ஸத்தாதிகளை உடையவனுய் இருக்கிற ஈச்வரனுடைய ஸ்வரூபம் ஸத்யத்வாதிகளாகிற ஸ்வரூப நிரூபகதர்மங்களாலே ஸத்யமாய், ஜ்ஞாநமாய், அநந்தமாய், ஆநந்தமாய், அமலமாய் இருக்கும். இவ்வர்த்தத்தை 'நந்தா விளக்கேயளத்தற்கரியாய்' (பெரியதிருமொழி 3-8-1) என்றும், 'உணர்முழுநலம்' (திருவாய்மொழி 1-1-2) என்றும், 'சூழ்ந்ததனிற் பெரிய சுடர்ஞானவின்பம்' (திருவாய்மொழி 10-10-10) என்றும், 'அமலன்' (அமலனதிபிரான் 1) என்றும் இத்யாதிகளாலே ஆழ்வார்கள் அநுஸந்தித்தார்கள். மற்றுள்ள குணங்களும் திவ்ய மங்கள விக்ரஹாதிகளும் எல்லாம் ஈச்வரனுக்கு நிரூபித ஸ்வரூப விசேஷணங்களாயிருக்கும். இக் குணங்களில் ஜ்ஞாந பல ஐச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ்ஸுக்கள் என்று ஆறுகுணங்கள் பரத்வோபயுக்தங்களாயிருக்கும். ஸௌசில்ய வாத்ஸல்யாதிகள் ஸௌலப்யோபயுக்தங்களாயிருக்கும். இக் குணங்கள் எல்லாம் ஸர்வகாலத்திலும் ஸ்வரூபாச்ரிதங்களாயிருக்கும். பரவ்யூஹாதி விபாகங்களில் குணநியமம் சொல்லுகிறதெல்லாம் அவ்வோரூபங்களை அநுஸந்திப்பார்க்கு ஸர்வேச்வரன் ஆவிஷ்கரிக்கும் குண விசேஷங்கள் சொல்லுகைக்காக அத்தனை. ஔபநிஷத வித்யா விசேஷங்கள்தோறும் அநுஸந்தேய குண விசேஷங்கள் நியதமானாற்போல பகவச் சாஸ்த்ரோக்தமான ரூப விசேஷாநு ஸந்தாநத்துக்கும் குண விசேஷங்கள் நியதங்கள். அவ்விடத்தில் பரரூபத்தில் ஜ்ஞாநாதி குணங்கள் ஆறும் வேத்யங்கள்."
—[ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம். தத்வத்ரய சிந்தநாதிகாரம்.]

"வ்யூஹங்கள் நாலென்றும் மூன்றென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லும். நாலு வ்யூஹம் உண்டாயிருக்க வ்யூஹ

வாஸுதேவ ரூபத்திற்கு பரரூபத்திற் காட்டில் அநுஸந்தேய குண பேதம் இல்லாமையாலே த்ரிவ்யூஹம் என்கிறது. இப்பகுதியை

" குணைஷ் ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதரமூர்த்தி ஸ்தவ பபௌ,
ததஸ் திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக யுகளீர்ஹி த்ரிபிரபு:."

—(வரதராஜஸ்தவம்–16)

(மூவிரண்டு குணங்களை உடைய வரதராஜனே! தேவரீருடைய அகிலமூர்த்திகட்கும் முதன்மையான பரவாஸுதேவ மூர்த்தி கீழ்ச் சொன்ன இந்த ஆறு குணங்களால் விளங்கிற்று. அதற்குமேல் மும்மூர்த்திகள் அந்த குணங்களுடையே மூவிரண்டுகளாலே பிரகாசித்தன. இப்படிப்பட்ட வ்யவஸ்தை யாதொன்று உண்டு அந்த வயவஸ்தை குணங்களை வெளியிடுதல்பற்றியாம். தேவரீரோவெனில் அகிலமூர்த்திகளிலுமே எண்ணிறந்த சிறந்த கல்யாண குணங்களை உடையீராயிரா நின்றீர்.)

என்கிற சலோகத்திலே ஸங்க்ரஹித்தார்கள்.

இப்பரவ்யூஹங்களில் குணக்ரியாவிபாகங்கள்

' ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர இதி ஸபவாந் முக்தபோக்யோ
பலாட்யாத் போதாத் ஸங்கர்ஷணஸ்த்வம் ஹரசி விதநுஷே
சாஸ்த்ர மைச்வர்யவீர்யாத் ,ப்ரத்யும்நஸ் ஸர்க்கதர்மௌ
நய்ஸிச பகவந்! சக்தி தேஜோநிருத்த: பிப்ராண: பாஸிதத்வம்
கமயஸ் ச சதா வ்யூஹ்ய ரங்காதிராஜ.' (39)

—(ஸ்ரீரங்கராஜஸ்தவம், உத்தரசதகம்.)

(பகுவானகிய திருவரங்க நகரதிபனே! பூஜ்யரான தேவரீர் வாஸுதேவாதி வ்யூஹரூபேண அவதரித்து, ஞானம் முதலிய ஆறுகுணங்களோடு கூடி பரவாஸுதேவர் என வழங்கப்பெற்றவராகி, முக்தர்கட்கு அநுபாவ்யராக ஆகின்றீர்; பலத்தோடு கூடின ஞானத்தோடு கூடி ஞானமும் பலமுமாகிற இரண்டு குணங்களை உடையவராய்க் கொண்டு ஸங்கர்ஷணமூர்த்தியாகி ஸம்ஹாரத் தொழிலை நடத்துகின்றீர்; சாஸ்த்ரத்தையும் அளிக்கின்றீர்; ஐச்வர்ய வீர்யங்களோடு கூடி ப்ரத்யும்ந மூர்த்தியாகி ஸ்ருஷ்டியையும் பண்ணி தர்மத்தையும் ப்ரவர்த்திப்பிக்கிறீர்; சக்திதேஜஸ் ஸுக்களாகிற இரண்டு குணங்களை உடையவராகி அநிருத்தமூர்த்தியாய் ரக்ஷணத் தொழிலை நடத்துகின்றீர், தத்வ ஜ்ஞாநப்ரதாநமும் பண்ணுகின்றீர்.) என்கிற ச்லோ

கத்திலே ஸங்க்ரஹிக்கப்பட்டன. ஜாக்ரதாதிபத பேதங்களில் உள்ள விசேஷங்களெல்லாம்

' ஜாக்ரத் ஸ்வப்நாத்யலஸதுரீய ப்ராயத் யாத்ரு க்ரமவ
துபாஸ்ய, ஸ்வாமிந்! தத்தத் ஸஹ பரிபர்ஹ: சாதுர்
வ்யூஹம் வஹஸி சதுர்த்தா: ' (2-40)

—(ஸ்ரீரங்கராஜஸ்தவம்.)

(திருவரங்கநாதரே! விழித்துக் கொண்டிருப்பாரும், உறங்கிக் கொண்டிருப்பாரும், ஸுஷுப்தியில் இருப்பாரும, மூர்ச்சதசையில் இருப்பாருமான த்யாநம் செய்பவர்களின் ரீதிகளையுடைய அதிகாரிகளாலே உபாஸிக்கத் தகுந்தவராய், தகுதியான பரிச்சதங்களை உடையவராய் நான்கு வகையாக வ்யூஹசதுஷ்டயத்தை வஹிக்கின்றீர்.)

என்று ஸங்க்ருஹீதங்களாயிற்று."—[ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம். தத்வத்ரயசிந்தநாதிகாரம்.]
என்ற பேராசிரியர்கள் விளக்கம் இவண் ஆநுஸந்தேயம்.

இத்துணையுங் கூறியவாற்றுல், விரோதியைப் போக்கி இஷ்டங்களைத் தருதற்குரிய அறிவாற்றல் முதலிய குணங்கள் இறைவன் பாலுள்ளன என்று உணர்த்தாவிடின் புகலற்றவர்கள் சம்சயமற்று அவன் திருவடியைத் தஞ்சமாகப் பற்றவேண்டும் என்ற உணர்ச்சி அவர்கட்குத் தோன்றுது என்பது ஒருதலை. ஆதலால், ஆதிக்குறளில் ஆறு குணங்களை உடையன் என்று கூறினர் என்பது பெறலாம். இதனல், முன்னர் அறிவித்தவாறு இருவகைப்பட்ட இறைவனது குணங்களில் இங்குப் பிறருக்கு உபயோகபடுங் குணங்களைச் சுட்டியுணர்த்தினர் என்று கொள்ளத்தக்கது.

இனி, இறைவன்றன்னியல் பைத் தெரிவிக்கும் குணங்களையும விளக்கி யுரைக்க வேண்டிய கடமை உண்டாதலால் இரண்டாவது குறள் தொடங்கி பல குறள்களால் இறைவன் திருவடியையே தஞ்சமாகப் பற்றவேண்டும் என்று பன்முறையும் வற்புறுத்திக்கூறி ஒன்பதாவது குறளில் "**எண்குணத்தான்**" என்று தெரிவித்தார் திருவள்ளுவர்.

ஓரதிகாரத்தில் முன்னர் அறுகுணங்களையுடைய இறைவன் என்று உரைத்துப் பின்னர் எண்குணங்களையுடையன் என்று நவில்தற்குக் காரணம் யாது? என்றும், அறுகுணங்களையுடையவனே எண்குணங்களையுடையனையும் இருப்பன் என்பதா? அல்லது அறுகுணங்களை உடைய

வன் வேறு எண்குணங்களை உடையவன் வேறு என்பதா? என்றும், ஓரதிகாரத்தில் தொடங்கியதற் கேற்ப முடிவில் ஒற்றுமை யுற்றிராததற்குத் தக்க சான்றுகள் வேண்டுமே என்றும் பல விஞக்கள் எழும். ஆதலால் அதனைச்சற்று ஆராய்வாம்.

ஆறுகுணங்கள் முன்னரே விளக்கப் பெற்றன. எண் குணங்களாவன :— "அபஹதபாப்மாவிஜரோவிம்ருத்யு : விசோகோ விஜிகத்ஸோபிபாஸ : ஸத்யகாமோ ஸத்ய ஸங்கல்ப :" எனபனவாம். பாபமின்மை, நரையின்மை, மரணமின்மை, சோகமின்மை, பசியின்மை, தாகமின்மை, ஸத்யகாமம, ஸத்யஸங்கல்பம் என்பன இவற்றின் பொருள். இந்த எண்குணங்களே இறைவனது இயல்பை விளக்கு கின்ற குணங்களாம் என்று அறியத்தக்கது.

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

[தத்தமக்கு ஏற்ற புலன்களைக் கொள்கையில்லாத பொறிகள் போலப் பயன்படுதல் உடைய அல்ல, எண் வகைப்பட்ட குணங்களை உடையானது தாளை வணங்காத தலைகள்.)

என்பது ஒன்பதாவது குறள். இதற்கு முன் உள்ள எட்டுக்குறள்களுள் முதற்குறள் நீங்கலாக ஏனைய குறள் களை ஆராய்வோமாகில் இந்த எட்டு குணங்களும் அவற் றில் பொதிந்து உள்ளமை அறியலாம்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். (2)

[எல்லா நூல்களையுங் கற்றவர்க்கு அக்கல்வி யறிவி னால் உண்டாகிய பிரயோசனம்யாது, மெய்யுணர்வினையுடை யானது நல்ல தாள்களைத் தொழாராயின்.]

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். (3)

[அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண்ணே அவர் நினைந்த வடிவோடு விளங்து சென்றவனது மாட்சி மைப்பட்ட திருவடிகளைச் சேர்ந்தவர் எல்லா வுலகங்களுக் கும் மேலாகிய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வார்.]

என்பன இரண்டாவது, மூன்றுவது குறள்கள். இவற் றுல் சொல்லப்பெற்ற "நற்றாள்" "மாணடி" என்ற பதங்

கள் லக்ஷணையால் அப்ராக்ருத திவ்ய மங்கள விக்ரஹத்தை உடையவன் என்ற பொருள்த்தரும். இதனல் நரையின்மை பெறப்பட்டது. அப்ராக்ருத வடிவு ஒளியுடைய தாயும், ஒருபடிப்பட்டதாயும் இருக்குமாதலால அதற்கு நரை என்பது இல்லை.

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில. (4)

[ஒரு பொருளையும் விரும்புதலும் வெறுத்தலும் இல்லாத இறைவனது திருப்பாதங்களைச் சேர்ந்தவர்க்கு எக்காலத்தும் பிறவித்துன்பங்கள் உண்டாவன அல்ல.]

என்ற நான்காவது குறளில் "**வேண்டுதல் வேண்டாமை யிலான்**" என்றதனல் பாபமின்மை யறியலாகும். விருப்பு வெறுப்புக்களே பாபம் விளைதற்குக் காரணம். இவை இரண்டும் இல்லாதவன் எனவே அவன் இயல்பாகவே பாபங்களினின்று நீங்கினவன் என்பது போதரும்.

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (5)

[மயக்கத்தைப் பற்றி வருகிற நல்வினை தீவினை யென்னும் இரண்டு வினைகளும் உண்டாகாவாம் தலைவனது மெய்ம்மை சேர்ந்த கீர்த்தியை விரும்பினவரிடத்து.]

என்பது ஐந்தாவதுகுறள். இதில் "**இறைவன் பொருள் சேர் புகழ்**" என்றதனன் ஸத்யகாமம ஸத்ய ஸங்கல்பம் என்ற இரண்டும் விளங்கும். ஸத்யகாமமாவது - பழுதடையாத இச்சை. ஸத்ய ஸங்கல்பமாவது - பழுதடையாத நினைவு. ஜீவன் கர்ம வசப்பட்டவனதலால் இவனது இச்சையும் நினைவும் பழுதுற்றனவாயிருக்கும். இறைவன் கர்மவசப்படாதவனதலால் அவனது இச்சையும், ஸங்கல்பமும் ஸத்யம் உடையனவாயிருக்கும். இவற்றை மெய்ம்மை சேர்ந்த புகழ் என்று உரைக்கலாம்.

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். (6)

[மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம் பொறிகளை வழிகளாக வுடைய ஐந்து ஆசைகளையும் ஒழித்தவனது மெய்யான ஒழுக்க நெறியின்கண் வழுவாது நின்றவர் பிறப்பில்லாமல் எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ் வார்.]

என்பது ஆறுவது குறள். இதில் "**பொறிவாயிலைந் தவித்தான்**" என்ற தனல் பசியின்மை, தாகமின்மை, சோக

மின்மை, மரணமின்மை என்ற நான்கு குணங்களும் அறிய லாகும். பசிதாகம் இருந்தால் அன்றே அவற்றை அகற் றிக் கொள்ளப் புலன்களேமேயப் பொறிகள் செல்லும். சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பனபுலன்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன பொறிகள். பசிதாகம என்ற இவை இல்லாதவனதலால் பொறிவாயிலைந்தவித்த வனனன். பசிதாக மற்றவன் எனவே இவை காரணமாக வருகிற சோகம் அற்றவன் எனபது தன்னடையே விளங்கு கிறது. உண்ணுஞ் சோறும் பருகு நீரும் பசி தாகங்களை அகற்றித் தேகத்தை வளரச் செய்கின்றன. இவையில்லா விடின் தேகம தேயும். அதனன் மரணம் உண்டாம். அவன் பசிதாகம் இல்லாதவன் எனவே உணவுப் பொருட் கொள் ளாதவன் என்பதும், அதனல் வளர்தல், தேய்தல் அற்ற வன் என்பதும், அதனல் மரணம் இல்லாதவன் என்பதும் புலன் ஆகின்றன.

முதற்குறளால் பெறப்பெற்ற ஆறுகுணங்களையும் ஏனை ஐந்து குறட்களால் குறிப்பாற் பெறப்பட்ட எண்குணங்களை யும் உடையவனே தனக்கொரு வாற்ருலும் ஒப்பற்றவனையும், தர்ம ஸ்வரூபியாயும் இருப்பான் என்பதை ஏழு எட்டாவது குறட்களால் "**தனக்குவமையில்லாதான்**" என்றும், "**அறவாழி யந்தணன்**" என்றும் உணர்த்தினர் முதற்பாவலர். அக்குறட் பாக்களாவன :—

தனக்குவமை இல்லாதான் ருள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது. (7)

[ஒருவகையினலும் தனக்கு ஒப்பில்லாதவனது பாதங் களைச் சேர்ந்தவர்களுக்கல்லது மனத்தில் தோன்றுந்துன் பங்களை நீக்குதல் உண்டாகாது.]

அறவாழி யந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது. (8)

[தருமக்கடலாகிய கடவுளது அடியாகிய மரக்கலத் தைச் சேர்ந்தவர்க்கல்லால் அதனின் வேருகிய கடல்களைக் கடத்தல் கூடாது.] என்பன.

ஒன்பதாவது குறளினல் முன் குறிப்பாற் பெறப்பட்ட எண்குணங்களைத் தெளிவாக "**எண்குணத்தான்**" என்று சுட்டி உணர்த்தினர்.

மேலும், முன்னர் ஆறுகுணங்களை உடையவன் என்று விளக்கி, இறுதியில் எண்குணம் உடையவன் என்று

நவின்றதால், ஒரு குறிப்புப் பொருளும் தோன்ற வறது. அஃதாவது, உலகினர்க்கு உள்ள விரோதியைப் போக்கி இஷ்டத்தைத் தருவதற்கு அறிவாற்றல் முதலிய குணங் களையுடையவனுகிய இறைவன்றன் திருவடியைத் தஞ்ச மாகபபற்றியவர்கட்கு அவன் தன்னை ஒக்க அருள் செய் பவன் ஆதலால் எண் குணங்களையும் முடிவிலாநந்தத்தை யும் கொடுப்பான் என்பதாம். ஜீவன் முக்தனுயிருக்கும் நிலையில் எண்குணங்களை யுடையவனுய் விளங்குகின்றுன் என்பது நூன் முடிபு.

இன்னும் இந்தக் "கோளில் பொறியில்" என்ற குறள் இந்தக் குறிப்புப பொருளைத் தருகிறது என்பது இனிக் காட்டப் பெறும்.

இரண்டாவது குறளில் "நற்ருள் தொழா அர்" என்றும், மூன்ருவது குறளில் "மாணடி சேர்ந்தார்" என்றும், நான்காவது குறளில் "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு" என்றும், எட்டாவது குறளில் "அறவாழி யந்தணனருள் சேர்ந்தார்க்கு" என்றும், இறை வன்றன் திருவடியை அடைதலாகிய தொழிலையுடையார் மேலேற்றிக் கூறினர். "கோளில் பொறியில்" என்ற ஒன்பதாவது குறளில் மாத்திரம் "குணமிலவே எண்குண த்தான் தாளை வணங்காத்தலை" என்று இறைவனது அடியை வணங்காத தலைகள் பயனுடைய வல்ல என்று அவயவத்தின் மேலிட்டுக் கூறினர். இங்ஙனங் கூறுதற்கு முக்யமான ஓர் கருத்து இருத்தல் வேண்டும். அது யாதெனின், அறப்பெரிய பயனைப் பெறுதற்கு யோக்யதை யுடையார் அப்பயனைப் பெருது இழந்திருப்பரேல் இவர் களைக்கண்ட விடத்துப் பெரியார்கட்கு வெறுப்புண்டாவது இயல்பு. அதுபோல இங்கு இறைவன் திருவடியை உபாயமாகப்பற்றி அதனல் முடிவிலாநந்தத்தையும், எண் குணங்களையும பெற்று வாழ்வதற்கு யோக்யதையுடைய வராயிருந்து வைத்தும் அதைப் பெருதிருப்பவரைக் கண்டு வெறுப்புற்று அவரைச்சுட்டி யுரைப்பதற்கு மனமில்லாத வராய் அவர் தம் அவயவத்தின் மேலிட்டு "எண் குணத் தான்ருள வணங்காத்தலை கோளில் பொறியிற் குணமில" என்று உரைத்தார் என்பதாம்.

இதனல் எண் குணத்தான் தாளை வணங்கியவர்கள் தாமும எண்குணத்தை உடையவராய்ச் சுகமாக வாழலாம்

என்ற குறிப்புப் பொருள் விளங்குவதையும் நன்கு அறியலாம்.

பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார். (10)

[இறைவனது பாதமாகிய மரக்கலத்தைச் சேர்ந்தார் பிறவியாகிய பெரிய கடலை நீந்துவர். அதனைச்சேராதார் கடக்கமாட்டாதவராகி அக்கடலுள் அழுந்துவர்.]

என்ற குறளே கடவுள் வாழ்த்து அதிகாரத்துக்கு இறுதிக்குறளாக விருக்கினும், அது நியமார்த்தத்தை விளக்க வந்ததே யன்றிச் செய்தி உரைக்க வந்தது இல்லை. நியமார்த்தமாவது—முன்னர்ப் பெறப்பட்டதை வற்புறுத்துவதற்குப் பின்னரும் அதனையே சுட்டியுரைப்பதாம். செய்தியுரைக்க வந்த குறள்களில் "**கோளில் பொறியில்**" என்ற குறளே இறுதிக் குறளாதலால் இதுவே இறுதிப் பாடலாக வைக்கலாயிற்று.

இத்துணையும் விளக்கியவாற்றால், முதற்குறளிற் கூறப்பெற்ற ஆறு குணங்கள் பிறருக்கு உபயோகப்படுங் குணங்கள் என்றும், இறுதிக் குறளினால் உரைக்கப்பெற்ற எண் குணங்கள் இறைவன்றன்னியல்பைக் காட்டுங் குணங்கள் என்றும் தெற்றெனப் பொருள் கூறினமை கொண்டு இக் குறள்கள் ஒன்றிற்கொன்று பொருள் வேறுபாடு இல்லை என்பது தெளிவாயிற்று.

பிராஹ்மணர்களுக்கு அவசியமாக ஆத்ம குணங்கள் என்று எட்டுக் குணங்கள் அபேக்ஷிதங்கள். அவையாவன:—தயை, க்ஷாந்தி, அநஸூயை, சௌசம், அநாயாஸம், மங்களம், அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹை என்பன. இந்த எட்டு ஆத்ம குணங்களோடு கூடிய ஒரு சேதனன் எண் குணத்தானை பகவானை ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்வதே ஸ்வரூபம். எனவே, எண்குணத்தானை வணங்கி உய்யலாம் என்பதாயிற்று.

பகவனே மாயோன். அவனே எண் குணத்தான். அவனே கண்ணன். அவன் கழலிணையே நமக்குத்தஞ்சம்.

ஆதியாகியாதி நீ ஓரண்டமாதியாதலால்
சோதியாத சோதி நீ அதுண்மையில் விளங்கினாய்
வேதமாகி வேள்வியாகி விண்ணினோடு மண்ணுமாய்
ஆதியாதி ஆயனை மாயம் என்னமாயமே?

—(திருச்சந்த விருத்தம் 34)